# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
**அறிவிக்கை எண்.**TNERC/CGRF&EO**/6–3 / 05–11–2009 நாளிட்டது**
**( ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம் )**

2004ஆம் ஆண்டு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சாரக் குறைத்தீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள ஒரு சில இடர்பாடுகளை நீக்குவதற்காகத் திருத்தங்களைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் மேற்கூறிய காரணங்களுக்காக திருத்தங்களைப் பிறப்பிப்பதற்கு வழிவகை செய்தல் முந்தைய வெளியீட்டின் வரையறைக்கு உட்பட்டும் மற்றும் அதற்கிணங்கியவாறு முந்தைய வெளியீட்டிற்கு உள்ளாகலாகி இருக்க வேண்டும் என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின்(மத்தியச் சட்டம் 36/2003) 42ஆம் பிரிவின் (5), (6) மற்றும் (7) ஆகிய உட்பிரிவுகளுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின் மூலம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம் (இதன்பின்பு இதில் முதன்மை ஒழுங்குமுறைவிதி என்று குறிப்பிடப்படும்) 2004ஆம் ஆண்டு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சாரக் குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளுக்குப் பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகளைக் குறித்துரைத்துள்ளது.

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

    (a) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2009ஆம் ஆண்டு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சாரக் குறைதீர்ப்பாளருக்கான(திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகள் என்று வழங்கப்பெறும்.

    (b) இவை, தமிழ்நாடு அரசிதழில் அவை வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

2. **முதன்மை ஒழுங்குமுறை விதிகளின் 7ஆம் ஒழுங்குமுறைவிதியின் (7)ஆம் உள் ஒழுங்குமுறை விதியின் திருத்தம் :**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 7ஆம் ஒழுங்குமுறை விதியின் (7)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் **''மன்றம் விசாரணையை முடித்தல் வேண்டும்''** என்ற

சொற்றொடருக்குப் பதிலாக, பின்வரும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

*“ மேற்சொன்ன விசாரணை பற்றிய அறிவிப்பை, ஒப்புகையுடனானப் பதிவு அஞ்சலில் “தேதி, நேரம் மற்றும் விசாரணை இடம்” பற்றி குறிப்பிட்டு முறையீட்டாளருக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட மின்உரிமம்தாரருக்கும் சார்வு செய்த பின்பு அது தொடர்பாக மன்றம் விசாரணையைத் தொடங்குதல் வேண்டும் மற்றும் மேற்சொன்ன விசாரணையை முடிக்கவும் வேண்டும். ’’*

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

**(இரா. பாலசுப்பிரமணியன்)**
செயலாளர்